**இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்தி செயற்திட்டம் - 2013**

இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு (ஜீஓஎஸ்எல்) மற்றும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 5228- எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகள் தேசிய மட்டத்தில் சுகாதார அமைச்சும் (எம்ஓஎச்) மாகாண மட்டத்தில் முன்னாள் உள்ளுராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சான தற்போதைய பொது நிர்வாகம், மாகாண சபைகள், உள்ளுராட்சி மற்றும் சனநாயக ஆளுகை அமைச்சும் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. மாகாண மட்டத்தில் பொதுநிர்வாகம், மாகாண சபைகள், உள்ளுராட்சி மற்றும் சனநாயக ஆளுகை அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீதான கருத்துரைகளை இந்த அறிக்கை கொண்டுள்ளது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன**

செயற்திட்டத்தின் மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம் 2013--2017 வரையான காலத்திற்காக தேசிய சுகாதார அபிவிருத்தி திட்டத்தை அமுலாக்குவதற்கு நிதி உதவி வழங்குவதற்காக இரண்டாவது சுகாதார துறை அபிவிருத்தி செயற்திட்டம் அமுலாக்கப்பட்டது. முன்னாள் உள்ளுராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சான தற்போதைய பொது நிர்வாகம், மாகாண சபைகள், உள்ளுராட்சி மற்றும் சனநாயக ஆளுகை அமைச்சு தேசிய மட்டத்தில் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. ஊட்டச்சத்தின்மை மற்றும் தொடர்பில்லா தொற்றுநோய்கள் என்பவற்றின் சவால்களிற்கு சிறந்த பதிலளிப்பதற்கான உறுதிப்படுத்தலிற்கு பொது மக்கள் சுகாதாரத்தின் செயலாற்றலின் நியமத்தை தரமுயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளன. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 200 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 129.8 மில்லியனாகும் செயற்திட்ட நடவடிக்கைகள் 2013 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாகப் பட்டியல்படுத்தியிருந்தது.

**1.3 ஒன்றிணைக்கப்பட்ட நிதி முகாமைத்துவ அறிக்கைக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

மாகாண சுகாதார திணைக்களத்தின் முடிவடைந்த ஒதுக்கீட்டு கணக்குகளின் பூர்த்தியாக்கலிருந்த ஒன்றிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையை நியாயபூர்வமாகத் தயாரித்து சமர்ப்பிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான நிதிப் பிரமாணங்கள் திறைசேரியால் விநியோகிக்கப்படும் சுற்றறிக்கைகளை தெரிவு செய்வதும் பயன்படுத்துவதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்**

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கை தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கைய திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கையின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், மற்றும் காலம்

என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கை பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கையிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கையை தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கொடையளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான மாகாண சுகாதார திணைக்களத்தால் ஏற்பட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளிற்கிணங்க கடனின் கீழான பற்றுதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன சுகாதாரத் துறை நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(உ) ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகள் நிதிப்பிரமாணம் 150 மற்றும் பொதுத் திறைசேரியின் 2013 திசெம்பர் 06 ஆம் திகதிய 233/2013 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றுநிரூபம் என்பவற்றிக்கிணங்க தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(ஊ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்காக ஆரம்ப முற்பணம், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரம்பல்கள் பொதுநிர்வாக, மாகாணசபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாய ஆளுகை அமைச்சால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டு பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டதா என்பதும்,

(எ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்

## 3. அபிப்பிராயம்

-----------------------

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும்

எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையானது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கட்டுநிதி கணக்கிற்கான ஆரம்ப முற்பணங்கள், அதிலிருந்தான பற்றுதல்களும் அவற்றிற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(எ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட தகவல்களின் படி, சகல மூலங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகளில் ரூபா 34,734,406,629 கூட்டுமொத்தத் தொகையான செலவினம் மீளாய்வாண்டின் போது மாகாண சுகாதார திணைக்களத்தால் ஏற்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டு கணக்கில் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டின் போது மாகாண சுகாதார திணைக்களத்தால் சகல மூல நிதிகளிலிருந்து ஏற்பட்ட செலவினத்தின் பொழிப்பை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| வகுதி | 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது பெறப்பட்ட சகல நிதி மூலங்களிலிருந்து ஏற்பட்ட செலவினம் |
|---|---|
| | ரூபா |
| மீண்டெழும் செலவினம் | 34,198,525,465 |
| மூலதனச் செலவினம் | 535,881,164 |
| | 34,734,406,629 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 நிதிகளின் பயன்பாடு

2013 யூலை 01 இலிருந்து 2013 திசெம்பர் 31 வரையான காலத்திற்காக செயற்திட்டத்தால் பெறப்பட வேண்டுமென ரூபா 100 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 769,230

வேண்டப்பட்டிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து எவ்வித நிதிகளும் பெறப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தின் திரண்ட முகாமைத்துவ அறிக்கையின் பிரகாரம், மூலதன கருத்திட்டங்களின் கீழ் ரூபா 900,283,130 மற்றும் மீண்டெழும் கருத்திட்டங்களின் கீழ் ரூபா 414,632,948 ஆன தேறிய சேமிப்புக்கள் மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களைச் செய்வதற்கு பாதீட்டு மதிப்பீட்டின் ஊடாக இலங்கை அரசாங்கத்தால் செய்யப்பட்ட முறையே ரூபா 35,098,808,601 மற்றும் ரூபா 36,049,322,719 கூட்டு மொத்தத் தொகையான ஏற்பாடுகளில் சகல ஒன்பது மாகாண ங்களிலும் அறிவிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான மொத்த தேறிய ஏற்பாடுகளில், 9.5 சதவீதத்திற்கு மேலான தேறிய சேமிப்புக்கள் சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள மாகாண சுகாதார திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருந்த அதேநேரம் ஏனைய ஆறு மாகாணங்களிலிருந்து மொத்த தேறிய ஏற்பாட்டில் 5 சதவீதத்தை விட குறைவான தேறிய சேமிப்புகள் அறிவிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும், மேல் மாகாண மாகாண சுகாதாரத் திணைக்களத்திற்கு செய்யப்பட்ட மொத்த தேறிய ஏற்பாடுகளில் 1.2 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 84,397,152 ஆன மிகைகள் அறிக்கையிடப்பட்டிருந்தது.

## 6.2 பௌதீக செயலாற்றல்

-----------------------------------

இந்த அறிக்கையின் பந்தி 5.1 இல் குறிப்பிடப்பட்டவாறு திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கை 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட நிதிகளில் மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் பயன்படுத்தப்பட்ட ரூபா 34,734,406,629 தொகையொன்றைக் காட்டியிருந்தது. 2013 ஆம் ஆண்டிற்காக மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கில் செய்யப்பட்ட சில பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு மீள அறிவிக்கப்பட்டுள்ளன.

(அ) கண்டி மாவட்டத்தில் கந்தான மத்திய மருந்து களஞ்சியம் மற்றும் நவலப்பிட்டிய வைத்தியசாலை மற்றும் மாத்தளை சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகம் என்பவற்றுக்கு வழங்கப்பட்ட மருந்துகள் மற்றும் அறுவைச்சிகிச்சை கருவிகள் நியம தரங்களில் இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும், தென் மாகாண ஹிக்கடுவ மாவட்ட வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட பராமெதசைசின் கைரோசெலோறிடி யூ.எஸ். 25 மிகி ஊசிகளில் சந்தேகத்திற்கிடமான விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

(ஆ) குளியாப்பிட்டி ஆதார வைத்தியசாலையில் 04 சத்திரசிகிச்சை அறைகளுடன் ஏழு மாடிக் கட்டிடமொன்று பொல்பித்திகம கிராம வைத்தியசாலையில் சிறுவர் வாட் மற்றும் நாவலப்பிட்டிய ஆதாரவைத்தியசாலையில் எகஸ்றே இயந்திரங்கள் 1 ½ ஆண்டுகளிற்கு மேலாக குறைப்பயன்பாடு சொத்துக்களாக அறிக்கையிடப்பட்டிருந்தது.

(இ) மேற்குறிப்பிட்டவற்றுக்கு மேலதிகமாக, மத்திய, தெற்கு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு இன்மையால் பொதுவான கருத்துரைகள் உரிய மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்குகளின் கணக்காய்வில் செய்யப்பட்டதுடன் வடமத்திய, வட மேல், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் மற்றும் வருடாந்த கொள்வனவுத் திட்டம் என்பன இன்மையால் உரிய மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கு கணக்காய்வு செய்யப்பட்டன, ஆதலால் உரிய மாகாண திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது முறையாக ஒழுங்குபடுத்தப்பட்டு, கண்காணிக்கப்பட்டு மற்றும் மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை